ஓம்.
நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — ௧. } பிங்கள ௵ மார்கழி ௴ 1917-ம் ௵ டிசம்பர் ௴ { மதி — ௫.

நாமகள் துதி.

உரைத்தமிழ் மூவர்நாவி னூற்றெழு மமுதைச் சங்கத்
திருக்கும்வெண் முத்தைக்கற்றோ ரென்னுமீக் கூட்டுந் தேனை
வரைத்தமிழ் முனிவனெஞ்ச மலர்க்கம லப்பூஞ் சேக்கைத்
திருத்தகு மாசவன்னப் பேட்டினைச் சிந்தை செய்வாம்.

அறத்துட் சிறந்தது யாது?

(௧௭-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் 'உடம்பில் உள்ள மாமிசமெல்லாம் உதிர்த்து விட்டாலல்லவோ? மாமிசம் விட்டதற் கடையாளம். விழு சுவர்க்கு மண் தடவுதல்போல மாமிச உடப்புக்கு மாமிசம் சேர்க்காவிட்டால் சரிப்படாது.' என்கின்றனர். அவர்கள் மலம் உள் நிறைந்த உடலென்று கருதி, பசிவரின் மலத்தையும் புசிக்கவேண்டும் அப்படிச் செய்யாமல் உள்ளிருக்கு மலம் வெளிப்பட்டபோதும் அருவருத்துக் கால் கைகளைச் சுத்திசெய்வதால் மாமிச உடலுக்கு மாமிசமே போடவேண்டு மென்பது கூடாது.

'ஊன் தின்னுஞ் சாதியார் தின்றே தீரவேண்டும்' என்பார் சிலர். ஊனுணுஞ்சாதி பகுத்தறிவில்லாச் சிங்கம் புலி முதலியனவே யன்றி, மனிதர்கள் ஊனுண்ணப் பிறந்தவர்களல்லர் சிங்கம் புலி முதலியவற்றின் பல், நாக்கு, கை, கால் முதலிய அவயவங்களையும் மனிதர்க்குள்ள பல் - நா - கை - கால் முதலிய உறுப்புக்களையும் நோக்கி உய்த்துணர்க.

இதைக்கவனிக்க.

முன்பு ஒரு நாரை கொல்லாவிரதம் பூண்டு மதுரையையடைந்து முக்தியுற்றது. ஒரு புறா வேடனது பசிநீக்க நெருப்பில் வீழ்ந்து பரலோக மடைந்தது. அகஸ்தியாதி முனிவர்கள் ஆசிரமத்திலுள்ள மிருகாதிகள் அருளொடு விளங்கின. என்று புராண இதிகாசங்களில் கூறியிருக்க; அறிவானுயர்ந்த மனிதர்கள் ஊனுண்டல் அறியாமை யுடைத்தே.

“சிலகாலம் தின்று பிறகு எனக்கு ஞானம் வந்துவிட்டதென்று ஊனுண்ணா திருத்தலால் என்னபயன்? அப்படி விட்டுவிடின், முன்புதின்ற வாயையுங் கையையும் விட்டுவிடவேண்டும். அப்படி இல்லாமையால், தின்றவன் குறுக்கே விடலாகாது” என்று சிலர் செப்புகின்றனர். சிறு குழந்தைகளா யிருக்கும்போதும் பைத்தியம் கொண்டபோதும் ஒருவர் செய்யும் இழிதொழிலைத் தெளிவு வந்தபோதும் செய்வாருண்டோ? “நீ குழந்தையா யிருந்தபோது அசுத்தத்தில் புரண்டாய் அதனைக் கையினால் எடுத்து வாயில் வைத்துக்கொண்டாய் ஆடை யுடுத்தா திருந்தாய்” என்றால், “தெரியாதகாலத்திற் செய்ததை இப்போது சொல்லவா வந்தாய்” என்று கோபிப்பானேயன்றி இது சரிதான் என்று பின்னும் அதுபோல் செய்யச் சம்மதிப்பானோ? பித்தருக்கும் இஃது ஒக்கும். ஆகையால், எப்போது ஊனுண்டல் பாவம் என்று அருவருப்பும் அறிவுந் தோன்றிற்றோ அப்போதே விட்டுவிடவேண்டும்.

இனிச்சிலர் “சரீரத்திற்கு மாமிசமன்றி வேறு பதார்த்தம் ஒத்துக்கொள்ளா விட்டால், அப்போது மாமிசத்தை உண்டுதான் தீரவேண்டும்” என்கின்றனர். ஆன்ம இச்சையே இதற்குக் காரணம். மனத்தில் ஊனுண்ண விருப்பம் இருந்தால் சரீரத்திற்கும் ஒத்துக் கொள்ளாது. ஆகையால், ஆன்ம இச்சையை அடக்குதல் பாவம் என்கின்றனர். இவ்வுலகத்தில் ஆணுக்காயினும் பெண்ணுக்காயினும் முறையில்லாரிடத்தும் காம இச்சை தோன்றின் ஆன்ம இச்சையை யடக்கக்கூடாதென்று அனுபவிப்பார்களோ? அவ்வாறு முறையற்றவர்களிடம் போகம் அனுபவிக்காததனால்,

மாமிசம் உண்டற்கண் எழும் ஆசையையும் அடக்கல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் பரியாலோசனைசெய்து அறிவின்மிக்க மனிதர்கள் ஊனுண்டலை விட்டுவிடின், அவர்களைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும் என்றறிக. இஃதன்றியும் நடக்கும் போதும் எறும்பு சிதல் முதலிய சிற்றுயிர்கள் வருந்தி மரிக்குமே என்று மெல்லப் பூமியை நோக்கியே செல்லவேண்டும். இவ்வாறு தீவினைக்கெல்லாம் முதலாகிய கொலைமைக் குணத்தைவிட்டு, புண்ணியத்துளெல்லாம் சிறந்த கொல்லாமையை மேற்கொண்டொழுகுவாராயின் அவர்பால் கூற்றனுங் குறுகான்; தருமந்தழைக்க, பாரம்பரியமாய் முத்தியடைவ ரென்பதற்குச் சந்தேகமே இல்லை.

"அறையுமறந் தனிற்பரம தருமமுயிர்க்
கொலைபுரியா தகற்ற லென்றே
மறைகள்முழக் கிடுவதென வைசம்பா
யனமுனிவன் வகுத்த லோடும்" (பாரதம்)

கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகும்
கொலையாதி யகன்றொழுகும் தவங்கடாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்குநூலும்
கொலையாதி யகற்றியநல் லறங்கடாமே
குவலயத்தி லொப்பரிய வறங்களாகும்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந்தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வதாமே. (சிவஞானதீபம்)

ஆனை யடியி லடங்கா வடியில்லை
தானதுபோ னிற்கின்ற தன்மைதான் - ஊனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கும்
எல்லா வறமு மிசைந்து. (இதிகாசம்)

இங்ஙனமாய பெரியோர் மொழிகளாற் கொல்லாமையின் சிறப்பறிக.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகும்
இலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்

எவ்வுயிரு மெய்ம்முயிர்போ லென்று நோக்கி
இரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியம தூதருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு
வேதனைசெய் திடுவரென வோதுநூலே. (சிவஞானதீபம்)

இன்னோய் நமக்குண்டென் றெண்ணு மலெவ்வுயிரும்
முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தா - மெங்நோவும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவா ரிசைந்து (இதிகாசம்)

இன்னோரன்ன பெரியோர் மொழிகள் மிகப்பல. இவற்றால், கொன்றுனுகர்வோர், கொடிய நரகத்தில் யமதூதர்களால், கழுவி லேற்றப்பட்டும், வயிரமுள் நிரைத்து நீண்ட இலவமரத்தி லேற்றப்பட்டுக் கீழே தீமடுக்கப்பட்டும், தம்மால் உயிர்போகிய பிராணிகளின் உடலைத் தாம் துணிப்படுத்தது போல, தம்முடம்பை வகை வகையாய் அரிந்து துணிப்படுத்தப்பட்டும், நெய்க் கொப்பரையில் சூலத்தால் குத்தி அழுத்தி நிணம் உருகக் காய்ச்சப்பட்டும், இரும்பை உருக்கி வாயில் வார்க்கப்பட்டும் இன்னும் பலவாறாக இன்னலுக்குள்ளாகி ஆ! ஆ!! அந்தோ!!! ஐயகோ!!! என்று அலறிக்கிடந்து வருந்துவர் என்பதறிக. தம்புண் கழுவுற்று மருந்திடுவர், பிறிதோருடம்பில் இரத்தம் நிணம் முதலிய அசுத்தமான புண்ணைப் பலகாயங்களாற் சுவைபடச்செய்து உண்பார். அவர்கட்கு இத்தர்மோபதேசம், அருவருப்பாகத் தோற்றினும் தங்கள் மனமே உயிர்க்கொலையால் வந்த ஊனுண்டல் பாவந் தானென்று சான்று பகருமே.

'நெஞ்சையொளித் தொரு வஞ்சகமில்லை' யே?

இக்கொல்லாமை என்னுங்குணம் கருணையுடையார்க்கன்றி ஏனையோர்க்கு உண்டாகாது. எவர்கண் இரக்கமுண்டோ அவர்கள் தருமமெல்லாம் செய்பவராவர். அருளின் காரியமே கொல்லாமையும் காத்தலும். அருளே (காரண காரிய ஒற்றுமையால் கொல்லாமையே) அறத்திற்கு ஏதுவாயிருத்தலால், அறத்துட் சிறந்தது கொல்லாமை எனக்கூறியதென்க.

இத்துணையுங் கூறிய வாற்றல் அறிவானுபர்ந்த மனிதர் ஊனுண்டல் அழகன்று என்றும், ஊனுண்பார்க்குங் கொலைப்பாவம் வருமென்றும், கொல்லாமையே தருமத்துளெல்லாம் சிறந்ததென்றும் அறிந்துகொள்க.

"கொல்லா விரதங் குவலயமெல் லாம்பாவ
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே."
"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே." (தாயுமானவர்)

தருமோபதேசி.

பத்துப்பாட்டு.

(கக - ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது, பொருநராற்றுப் படை:—

இது உசஅ-அடிகளுடையது; ஆசியப்பாவா னமைந்தது. வஞ்சிப் பாவிற்குரிய அடிகளும் கலந்துவந்தன. பரிசில் பெற வெண்ணிய ஒரு பொருநனைப்பரிசில் பெற்றுனொருவன் இளஞ்சேட் சென்னி புதல்வனுகிய கரிகாற் பெருவளத்தா னென்னும் சோழனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. (பொருநர் - ஒரு சாதியார்; இவர் ஏர்க்களம்பாடுநர், போர்க்களம்பாடுநர், பரணிபாடுநர் எனப் பலர் என்றுர் நச்சினர்க்கினியர். அவருள்: இவன் போர்க்களம் பாடுநன்.) இந்நூல் சோழன் கரிகாற்பெருவளத்தான் கொடையையும் வீரத்தையும் காவிரி நதிபயன்படுவதையும் விளங்கக்கூறும்.

"அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந!
... ...
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே."

என்பது இந்நூலின் முதலும் ஈறுமாம்.

" குளப்பு வழியன்ன கவடுபடு பத்தல்
... ...
ஆறுஅலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலைப் பெயர்க்கு மருவின் பாலை "

எனப் பாலையாழை வருணித்திருப்பது கவனிக்கத்தக்கது.

" முதியோர் - அவை புகுபொழு திற்றம்
பகைமுரண் செலவும்—பெரி தாண்ட "

என்றவிடத்து "தம்முண் மாறுபட்டுவந்த இரு முதியோர், இளை ஞனாகிய கரிகாலன் அரசு வீற்றிருத்தல் கண்டு, 'சொன் முடிவு கண்டு முடிவு' சொல்ல அறிவு போதாத இளையவன் நம் வழக்கை எவ்வாறு தீர்ப்பான் என்று பேசிக்கொள்ள, அஃதறிந்த கரிகா லன் நரைத்த முதியோன்போல வேடந்தரித்திருந்து, வந்த முதி யோர் உவப்பத் தீர்ப்புச் செய்தான்" என்ற விஷயம் விளங்கும். இதனால் கரிகாலன் அறிவு முதிர்ச்சி இளமையிலே இப்படி இருந்ததெனப் புலனும். இதனை "குலவிச்சை - கல்லாமற்பாகம் படும்" என்ற வழியுங்காண்க.

" செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
அகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறி யவன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தா யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண் (டு)
இன்மை தீர வந்தனென் "

என்பவும் பிறவும், கரிகாலனது மிக்க கொடை (ஈகை) ச்சிறப்பை உணர்த்துவனவாம்.

" இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன் "

" முருகற் சீற்றத் துருகெழு குரிசில் " இவற்றால்,

சேரனையும், பாண்டியனையும் வெண்ணில் என்ற ஊரில் எதிர்த்துத்தாக்கி வென்றான் என்ற அவனது மிக்க வீரம் தோன்றும்.

“ஒருகுடையா னென்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வெல்வேற் குரிசில்”

இவற்றால், கரிகாலனது செங்கோன் முறைமை தெரிவுறலாம்.

“மாமாவின் வயின்வயினெற்
றாழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினான்
... ...
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவல
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பி னாடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி”

இவை - அச்சோழ நாட்டின் வளங்கூற வந்தன. இவற்றில், திணைமயக்கம் கூறியது காண்க. (திணை - நிலம் மயக்கம் - கலத்தல்.) அதாவது:— மலைச்சார்வுடன் கடற்சார்வும், காட்டின்சார்வும், நாட்டின்சார்வும் கலத்தல் முதலியன.

“கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையும்
... ...
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும்”

என வருதல் காவிரியின் சிறப்புணர்த்தும். (தொடரும்)

பத்திராசிரியர்.

(பிழை திருத்தம்:— இரண்டாமதித் தமிழ்மகவில் ககூ - ம் பக்கம் உஎ - ம் வரியில், இவ்விருத்தப்பாவில் என்பதை இப்பாவில் எனத்திருத்துக.)

தமிழ் வாக்கியம்.

தமிழ் வாக்கியம் என்பது தமிழ் மொழியில் அமைக்கப் படும் வாக்கியம் என விரியும். தமிழ் என்பதற்குப் பல பொருள் கூறுவர். சில பொருள்கள் தமிழ்ப்புலவர் சரித்திர உபக்கிரமணிகையிற் கூறினும். வேண்டுவார் ஆண்டுக் காண்க. வாக்கியம் என்பது அவாய் நிலையுந் தகுதியும் அண்மையும் அமைந்து முதனிலையும் பயனிலையுங் கொண்டு முடியுஞ் சொற்களின் கூட்டம். அவாய் நிலை முதலியன இல்லது வாக்கியம் எனப்படுதலில்லை.

வாக்கியங்கள் பல கூடி வருவதே செய்யுளாகும். வடநூலார் செய்யுளை மஹா வாக்கியம் என்பர். வடநூலாருட் சிலர் செய்யுட் பாகங்களையும் வாக்கியமாக எழுதுவர். பரிமேலழகரும் சிலவிடங்களிலே எழுதுவர். அது விருத்த சந்தி எனப் படும். செய்யுளுக்கு அடி, தொடை முதலியவற்றாற் சில வேறு பாடுண்டு.

வாக்குண்டாம்.

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

இவ்வெண்பாவிலே வரும் வாக்கியங்கள் நான்கு. நான்கும் அமைந்தே இஃது ஒரு செய்யுளாயிற்று. “நலமிக்க” என்பது ஒன்றே மோனை முதலிய உறுப்பு நோக்கி மிகையாக வந்தது. மோனை முதலியன பாடம் பண்ணுதற்கு உபயோகமாவன.

வாக்கியத்திலே அமைந்துவருஞ் சொற்கள் செஞ்சொற்களாயிருத்தல் ஆவசியகம். எவ்விடங்களிலுந் திரிசொற்கள் வரற்பாலனவல்ல. பயனில் சொற்களும் வரற்பாலனவல்ல. வேறு

பொருட் சொற்களும் வரற்பாலனவல்ல. பொருத்தமிலாச் சொற்களும் வரற்பாலனவல்ல. மறைபொருட் சொற்களும் வரற்பாலனவல்ல. ஐயமான சொற்களும் வரற்பாலனவல்ல. மறுதலைச்சொற்களும் வரற்பாலனவல்ல. வந்தசொல்லின் பரியாயச் சொற்களும் வரற்பாலனவல்ல. வந்த சொல்லோடு அடைமொழியும் வரற்பாலனவல்ல. திசைச்சொற்களும் வரற்பாலனவல்ல. வடசொற்களும் வரற்பாலனவல்ல. கிராமியச் சொற்களும் வரற்பாலனவல்ல. வழுச்சொற்களும் வரற்பாலனவல்ல.

வாக்கிய மமைப்போரும் இலக்கணம், நிகண்டு முதலிய கருவிநூற்பயிற்சியும், இலக்கிய நூற்பயிற்சியும், தக்கோர் வாக்கிய நூற்பயிற்சியு முடையராயிருத்தல் ஆவசியகம். வாக்கியங்களிலே குன்றக்கூறுதல் முதலிய குற்றங்கள் வரலாகாது. அவ்வியாத்தி முதலிய குற்றங்கள் வரலும் ஆகாது. வாக்கியகாரர்கள் சிலர், குற்றங்களை நோக்காமல் எழுதிவிடுகிறார்கள். அவை பல வகைப் போக்குகளுந் தழுவுகின்றன. சில காட்டுதும்:

"வியாபாரி மடத்திலே வாசம்பண்ணிக் கொண்டிருந்தார்" "அஃது நம்முடைய சுயபாஷை யன்று" "பதியும் பசுவும் மட்டேயுள" என்னும் இவை வாக்கியம் எனப்படுமோ? "இராமன் குற்றவாளியல்ல என நினைக்கிறேன்" "ஊர்தோறும் பாடசாலை திறத்தல் வேண்டும்" இவை தமிழ் நடையாகுமா? சுமார், கேசு, சச்சரவு, பார்ப்பினி, உருண்டை என்னுஞ்சொற்கள் தமிழ் வாக்கியங்கட்கு இயையுமா?

தமிழ் வளர்ச்சிக்குக் களைபோலத் தடைசெய்யும் இவைகள் களைதற்பாலன. இயன்றவுரையிலே வழுக்கள் வாராமல் வாக்கியங்களை அமைத்தல் வேண்டும் என்பதை வாக்கியகாரர் சிந்தித்தல் வேண்டும். கடவுளுந்துணை செய்க.

இங்ஙனம்,

அ - குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

யாழ்ப்பாணம்.

நாம் எதனை விரும்புவது?

இவ்வுலகில் எவ்வகைப் பட்டவர்க்கும் விருப்பப் பொருளாய்க்காண்பது, உயிர்வாழ்தற் கின்றியமையாத உணவேயாம்; ஏனையவற்றின் பாலுளதாம் விருப்பம், அவ்வுண்டி நிறைவின் பிற்பட்டதே; அவ்வுணவின் விருப்பமும் சரீர நிமித்தத்தாலுளதாம். எவ்வகைப்பட்டோரும் விரும்பும் இத்தேகம் அவ்விரும்பியவர்க்கு எப்பயனைத்தரும் என்பதை இனிச்சிறிது ஆராய்வாம்.

விவேகிகள் இவ்வுடலை இறைவன் (கடவுள்.) தன்னை யுணர்தற்குச் சாதகமாய் அளித்ததென்றும், அதனைக் காத்தற்குப் பூர்வம் செய்துள்ள கன்மமே பிரதானமென்றும், அக்கன்மத்திற்கு வேறாய் இவ்வுடலை ஒருவன் உயர்வுபடுத்திக் கொள்ளுதற்கு இயலாதென்றும் உணர்ந்து, இதன்பால் வரும் சுகதுக்கத்தை இறைவன்பாற் செலுத்தி, அறியவேண்டியவற்றை ஆராய்வதில் முயல்வார்கள். ஏனையோர் இவ் யாக்கையைத் தாமாகப்பாவித்து, இதனை வளர்த்தற் பொருட்டே உழவாதி தொழின் முயற்சியால் அடையும் கஷ்டத்திற்கோ அளவில்லை. அக்கஷ்டத்திற்குத்தக்க பயனை யடைகின்றார்களில்லை. சுகமுங் கீழ்வருமாறு பேதப்பட்டுள்ளது:—"பூமியின் ராச்சியாதிபத்தியம், ரோகமற்ற யௌவனம், திடகாத்திரம், வித்தியாதி சப்தகுணங்கள் முதலியவை ஒருவனுக்கிருந்தாலும் மனுஷிய சுகத்துக்கு முடிவுண்டு. (க) மானிட கந்தர்வர்களென்று சொல்லப்பட்டவர்கள் ராஜாக்களைக்காட்டிலும் ஏழுமடங்குள்ள சுகத்தை யடைகிறார்கள். (உ) தேவ கந்தர்வர்கள் இவர்களைவிட நூறுமடங்கு சுகமுள்ளவர்கள். இவர்களைவிட (௩) பிதிர்க்கள் நூறுமடங்கான சுகமனுபவிப்பார்கள்.

(க) இந்தக் கல்பத்தில் மனுஷியனாகிப் புண்ணிய விசேஷத்தால் கந்தர்வ பதவியை அடைந்தவன் மனுஷிய கந்தர்வன்.

(உ) முன் கல்பத்தில் செய்த புண்ணியத்தால் இந்தக் கல்பத்தின் ஆதிலேயே கந்தர்வ பாவத்தை அடைந்தவன் தேவ கந்தர்வன்.

(௩) தங்களுடைய லோகங்களில் வெகுகாலம் வரையில் வசிக்கும் அக்கினிஷ்வத்த முதலிய பிதிர்கள்.

பிதுர்க்களைப்பார்க்கிலும் (௪) அஜான தேவர்கள் நூறுமடங்கு சுகிகள். (௫) கர்மதேவர்கள் இவர்களைவிட நூறுமடங்குசுகிகள். (௬) முக்கிய தேவர்களுடைய சுகம் இவர்களுக்கு நூறுமடங்கதிகம். இந்திரன் சுகம் இவர்களிலும் நூறுமடங்கு. சகலதேவ குருவான பிரகஸ்பதியின் சுகம் இந்திரனுக்கும் நூறுமடங்கு. பிரஜாபதியின் சுகம் குருவுக்கு நூறுமடங்கு. பிரம்மத்தின் சுகம் இவருக்கும் நூறுமடங்குள்ளது. பிர்ம்மத்துக்குத் துக்கம் ஒருக்காலுமில்லை.'' இவ்விதமாகச் சுகத்தின் கிரமம் தைத்திரீய வுபநிஷத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், சார்வபூமன், மனுடகந்தர்வன், தேவகந்தர்வன், பிதிரர், ஆஜானுதேவர், கர்மதேவர், முக்கிய தேவர், இந்திரன், பிரகஸ்பதி, விராட்டு, இரண்ய கர்ப்பன் இவர்களின் சுகபேதம் ஒன்றுக்கொன்று நூறுமடங்கு அதிகம் என, இவ்வாறும் ஆன்றோர்களால் சுகத்தின் தாரதம்மியம் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

சோ - வேலாயுத முதலியார்.

வசனக்குறிகள்.

(௨௧ - ம் பக்கத் தொடர்ச்சி.)

(:) இம்முக்காற்புள்ளியைத் தன்பொருளை விளக்கும் வாக்கியத்தினைப் பின்னேபெற்று முன் நிற்கும் சொல்லின் ஈற்றிலும், பின்வரும் வாக்கியத்தின் காரணமாய் முன்முடிந்துள்ள முற்றின் ஈற்றிலும் இடவேண்டும். (உ-ம்)

(௧) இரட்டித்து நின்று பொருளுணர்த்தும் சொற்கள்: அவ்வாறு இரட்டித்து நிற்றலேயன்றிப் பிரிந்து நில்லா. அமைச்சு—அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையும் செயல்களையும்.

(௨) மனத்திட்ப மில்லார்க்குப்படை அரண் நட்பு முதலியவற்றின் றிட்பங்களெல்லாம் உளவாயினும் வினை முடியாதாம்:

---

(௪) கல்பத்தின் ஆதியிலேயே தேவபாவத்தை அடைந்தடைந்தவர்கள் அஜான தேவர்கள்.

(௫) இந்தக் கல்பத்தில் அசுவமேதாதிகர்மங்களைச் செய்து வெகு ஐசுவரியத்தை அடைந்து அஜான தேவர்களால் சேவிக்கப்பட்டிருப்பவர்கள் கர்மதேவர்கள்.

(௬) யமன், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன். ருத்திரன் முதலிய பிரதான தேவதைகள் முக்கிய தேவர்களாம். சிலர் யமன்முதல் பிர்ம்மா பரியந்தமுள்ள தேவதைகளையும், சிலர் ௮ - வசுக்கள், ௧௨ - ஆதித்தியர்கள், ௧௧ - ருத்திரர்கள், ஆக ௩௧ தேவர்களையும் முக்கிய தேவர்களாகச் சொல்லுகிறார்கள்.

இக்காரணத்தால், "எனைத்திட்ப மெய்தியக்கண்ணும் வினைத்திட்பம்–வேண்டாரை வேண்டா துலகு." என்றார் திருவள்ளுவர்.

எல்லாவற்றையும் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறு வேறாய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க்கேற்பச்சொல்லுக: சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவாராகலான் ஏனைக்கற்கப் பெறாதன கேட்டறியலாம்.

(.) இம் முற்றுப்புள்ளி (முழுப்புள்ளி) முடிந்த வாக்கியத்தின் ஈற்றில் வரும்.

(உ-ம்) நன்னெறியாய ஞானமே வீடுதரும். நன்மைகளெல்லா வற்றினுஞ் சிறந்தது வீடுபேறென்பது. அதனைத் தலைப்படுதற் கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறியெனப்பட்டது. வீட்டிற்கு நெறியென அவ்வச்சமயத்தாராற் கூறப்படுவன வனைத்தும் தன் கண்ணே வந்து கூடநின்ற பெருநெறியாகலானும் அது நன்னெறி யெனப்பட்டது. நன்னெறி சன்மார்க்கம் என்பன, ஒரு பொருளன.

இதுகாறுங் கூறிவரப்பட்ட குறிகட்கு இவ்வாறுப்பெயர் கூறலாம்.

, உறுப்பிசைக் குறி. இங்கு ஒரு மாத்திரையும்,
; தொடரிசைக் குறி. இங்கு இரண்டு மாத்திரையும்,
: விளக்கிசைக் குறி. இங்கு மூன்று மாத்திரையும்,
. முடிப்பிசைக் குறி. இங்கு நான்கு மாத்திரையும்,

நிறுத்தி வாசிக்க வேண்டும்.

" " இம் மேற்கோள் குறிக்கு அனுவாதக் குறி என்றும் பெயர். அந்நிய வாக்கியத்தை எடுத்தெழுதும்போது அதை வேறு பிரித்துக் காட்டுவதற்கு அதன் முன்னும் பின்னும் இக் குறியை இடவேண்டும்.

(உ-ம்) வீடுபேற்றிற் கேது ஞானமே, இதனை "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்–நல்ல வாகமஞ்சொல்ல வல்லவா மென்னும்-ஊனத்தாரென் கடவார்" என்றதனாற் காண்க.

ஈசுரன் "பத்தி செய்யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்" ஆவன்.

' ' உள் மேற்கோள் குறி. இது மேற் கூறிய மேற்கோள் குறியிடப்பட்ட வசனங்களின் இடையே வேறு வாக்கியம் வரின் அதன் முன்னும் பின்னும் இடவேண்டும்.

(உ-ம்) நான் முருகனுடன் பேசும்போது அவன் "எனது தந்தையார் என்னை நோக்கி 'நீ நன்றாகப் படித்துக்கொள்' என்று கூறினார்; ஆகையால், நான் தங்களிடம் வந்தேன்." என்று உரைத்தான்.

(தொடரும்)

தமிழ் மாணவன்.

பத்திரிகை வரவு.

சுகாபி விருத்தினி:— இப்புதுவையில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைக்குள் உலக நன்மையே கருதி வெளியிடப்பட்டு விளங்குவது "சுகாபி விருத்தினி" என்னும் பக்ஷாந்தப் பத்திரிகை. இதன் அதிபரும் பொதுநோக்கமுள்ள குணசீலர். ஆகையால், இங்ஙனமாய பத்திரிகைக்கு யாவரும் தத்தமக்கியன்ற உதவி செய்து தளராது நடைபெறச் செய்யின் நந்நாடு எந்நாட்டினு நன்றாய்ச் சிறப்புற ஏதுவாமன்றோ?

இதன் வருடச்சந்தா உள்ளூர்க்கு ரூ ௧½ வெளியூர்க்கு ரூ ௨.

கற்பகம்:— இது அநேக விளம்பரங்களையும் பல விஷயங்களையும் தெரிவிக்கும் ஒரு மாதாந்தப் பத்திரிகை.

இதன் வருடச்சந்தா வெளியூர்க்கு ரூ ௩

இவ்விரு பத்திரிகைகளையும் நமக்கு அனுப்புகின்ற கனம் பத்திராசிரியர்கட்குத் தமிழ்மகவும் நன்றியும் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். (பத்-ர்.)

நீதி சாஸ்திரம்.

நீதி சாஸ்திரம் என்ற சமஸ்கிருதத்துள்ள நூலைத் தமிழ் உரையுடன் சுலோகத்தையும் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதி மிகச்சிறுபுத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டு இருக்கிறது.

இது ஒவ்வொரு மனிதர் காத்தும் இருக்கவேண்டியது அவசியம்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

விலை அணு 4.

P. L. CASYRAM SINGH & SONS.

General Merchants

Pondicherry.

FRENCH PERFUMERY.

Sents, Soaps, face powders, lotions and oils for hair, Eau de cologne, Lavander, Eau de Quinine, Rose Water, Pomades, Cosmetics and other toilette requisites.

Can be had from

K. APPATHURAY PILLAY,

Direct importer and General Merchant,

PONDICHERRY.

Price list will be sent free on application.

கடிதங்கள்.

சீர் பெறும் "தமிழ்மகவு" ப் பத்திராசிரிய ரவர்கட்கு. கற்றவரும் மற்றவரும் மெச்சிடு[illegible] சிறப்புடைய "தமிழ்மகவு" ஆம் கனிதரு நற்சுவை பெருகிடும் நம் செந்தமிழணங்கினைக்கண்டு களிப்புமிக வுற்றனம். பால் மணமாறாப் பாலப்பருவத்திலேயே அமைந்திருக்கும் அமிழ்தினு மினிய அருந்தமிழ் மொழியினைத்தும் எம்மனதினைக் கவர்ந்தன. அதிலுள்ள தமிழ்ச்சுவை யெமக்கு எல்லையில்லா ஆனந்த மீந்தது. அன்பர் யாவரையும் அகமகிழ்விக்கும் "தமிழ்மகவு" ஆம் நந் தமிழணங்கு நீடுவாழ்க. இவற்றிற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரியுமாறு பிரார்த்திக்கும்

அன்பன்,

சே - பகவதியானந்தம் செட்டியார்.

தூத்துக்குடி.

அன்பே பூஷணமா யணிந்து விளங்கும் முதலியாரவர்கட்கு, தங்கள் மாட்சிமை பொருந்திய தமிழ்மகவைக் கண்ணுற்றுக் களிப்புமிக வுற்றனன். விஷயங்கள் மிக்க அருமை வாய்ந்தவைகளா யிருக்கின்றன; ஆகையால், யான் "தமிழ்மக" வைப்பற்றித் தக்கோரிடம் பிரஸ்தாபித்துத் தக்க முயற்சி யெடுத்துள்ளேன்.

இங்ஙனம்:

T. S. குமாரசுவாமி முதலியார்,

உபாத்தியாயர்.

திருச்செங்கோடு.

---

௧௦ - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாதாரர்களாகச் சேரக்கருதுவோர் வி-பி-ல் அனுப்பும்படி செய்வதைவிட முற்பணம் அனுப்புதல் நன்றாகும். எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஐப்பசிமீ முதலாகவே சந்தாவின் கணக்கு வைத்[illegible]க்கொள்ளப்படும்.

[illegible]ல கடிதங்கள் எங்களிடம் நேரேவந்து சேராமல் தவ[illegible] தெரிகின்றன. யாவரும் இனி இவ்விலாசத்திற்கே எழுதுக.

விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்

நெ. 48. ரங்கப்பிள்ளை வீதி

புதுவை.